முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1274

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.03.2023, ஞாயிற்றுக்கிழமை

1. அறம் வேலிகொண்ட ஆறுமுக அரங்கனே
அன்னதான சேவைகொண்ட ஞான தேசிகனே
வரம்தந்து மக்களை மீட்கவந்த
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரைஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 12 ம் நாள், 26.03.2023, ஞாயிற்றுக்கிழமை)
இனிமைபட அரங்கன் உன் கொள்கைதான்
இந்த உலகத்தை மாற்றும் என்பது உறுதிஉறுதி
3. உறுதிகொண்டு உன்வழி வரும் மக்கள்தான்
உலகில் ஞானிகளாக மாறுவதும் உறுதிஉறுதியப்பா
உறுதிதந்து ஆறுமுகன் யான்
உன்னுள்ளே ஆக்கமாக இருந்து
4. கருதிவரும் மக்கள் அனைவருக்கும்
கலியுகத்தில் காட்சியும் ஞான தீட்சையும்
தீட்சையுமாக அருளி உன் சக்திவழி தெய்வநெறி அவரவர் பற்றும் படி
மாட்சிமைபட அற்புதம் உலகில் நடத்துகின்றேன் மகான் அரங்கன் வாழும் இடமே
5. இடம்தான் ஞான சபையாகும்
இதை உணர்ந்து தெளிந்துவந்து
தடையற அரங்கன்குடில் அமுதுண்டு
தவராஜன் தரும் தீட்சைஉபதேசத்தை
6. உபதேசமே ஞான உபதேசமாக
உலகைக்காக்கும் உயர்வான வேதமாக
உலகோர் ஏற்றுபணிந்து வந்தால்
உண்மைபட உலகமாற்றம் சடுதிநிகழும்
7. நிகழ்வதற்கே அற்புதத்தை நடத்திட
நிலமதனில் அவதாரம் எடுத்தஅரங்கன்
மகான்களில் சிறந்த ஞானியப்பா
மண்ணுலகில் உலகோர்க்கு கிட்டிய அரிய தவசியப்பா
8. அப்பனே அரங்கன் உன்னை அறிந்த மக்களுக்கு
அறியாமை அனைத்தும் அகன்றோடி
வரமென அழியாமை சக்திபெருகி
வையகத்தில் அனைவரும் ஞானிகளாவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–